

நகர் ஊரமைப்பு துறை

விருதுநகர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

ஆத்திப்பட்டி ஊராட்சி

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆத்திப்பட்டி ஊராட்சி / கிராமம், சர்வே எண்- **13/1A, 1B, 2, 3, 4A, 4B** - இல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லாத பகுதி)

இணையதள விண்ணப்ப எண்: S8V8XJSX

அளவு - 1 : 600

வ

குறிப்புகள்:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	=	2.0ஏக்கர் (8150.0 ச.மீ.)
மனைப்பிரிவு உத்தேச சாலையின் பரப்பளவு மூலை முடக்கு உட்பட	=	2626.75 ச.மீ.
மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	=	5523.25 ச.மீ.
மனைப்பிரிவு இடத்தின் எல்லை	=	
நிலையிலுள்ள சாலை	=	
மனைப்பிரிவு சாலை	=	
கோரிய மனைகளின் எண்ணிக்கை	=	34 எண்ணம்

ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை

சாதாரண வகை மனைகள்
மனை எண்கள்:1-33)
மொத்த மனைகள் = 33 எண்ணம்

பொது ஒதுக்கீடு: (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது)

பூங்கா பரப்பிற்கு ஈடான வழிகாட்டி மதிப்பு தொகையின் படி உரிய கட்டணத்தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. மனைப்பிரிவு சாலை, உள்ளாட்சி ஒதுக்கீடுகள் மற்றும் மூலை முடக்குகள் தானமாக உள்ளாட்சிக்கும் மற்றும் மின்வாரிய ஒதுக்கீடு பகுதியினை மின்வாரியத்திற்கும் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

உள்ளாட்சி உபயோகத்திற்கு -34.63 ச.மீ (0.63%) =
தான ஆவண எண்:6550/2024 நாள்(20-11-2024)

தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக (TANGEDCO) உபயோகத்திற்கு - 37.51 ச.மீ (0.68%) =
தான ஆவண எண்:6549/2024 நாள்(20-11-2024)

கட்டிட வரம்பு:

7.2மீ அகலச்சாலைக்கு 1.50மீ விடப்பட வேண்டும்.
9.0மீ (ம) 12.0மீ அகலச்சாலைகளுக்கு 3.0மீ விடப்பட வேண்டும்.

மூலை முடக்கு
12.00மீ அகலச்சாலைகளுக்கு வரை 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்:04.02.2019-ன் படி, உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
2. அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்:31.01.2020-ன் படி, உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன்.இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சியில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப ஆவணங்களில் (கிரையப் பத்திரம் - குத்தகை பத்திரம் -பட்டா -தானப்பத்திரம்-பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப் பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
8. ந.ஊ.ஆ. சுற்றறிக்கை 4367/2019 நாள் 13.03.2019-ன் படி மனைப்பிரிவு இடத்தில் அமைந்துள்ள குளத்தில் இருந்து 3.00மீ தள்ளி கட்டிடம் கட்டப்படவேண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' -அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.

குறிப்பு : அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ/ந.ஊ.து.இ.(விருமா)எண்: 168/2024

துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
விருதுநகர் மாவட்டம்

Signature Not Verified
Signed by Assistant Director
Date: 2024.12.01 17:09:39 IST

அனுமதி வரைவாளர் | வரைவாளர் நிலை - III | மேற்பார்வையாளர் | உதவி இயக்குநர்